பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*16 02 2026 MONDAY 7 15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காட்சியை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

2. இந்திய அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்திற்கான ஆவணம், அடுத்த மாதம் இறுதி செய்யப்படும் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான அமெரிக்காவுடனான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஈரான் அமைச்சர் திரு. *Abbas Araghi* ஜெனிவா சென்றுள்ளார்.

4. பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கொண்டுவர வேண்டும் என்று ஐ.நா சர்வதேச குழந்தைகள் நல நிதியம் வலியுறுத்தியுள்ளது.

5. தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manish Sureskumar* பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காட்சியை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் இந்த கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்னவ், இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இந்த கண்காட்சியை பார்வையிடுகின்றனர்.

>>>>>>><<<<<<<

இந்திய அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்திற்கான ஆவணம், அடுத்த மாதம் இறுதி செய்யப்படும் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வர்த்தகத் துறை செயலர் திரு. ராஜேஷ் அகர்வால், அடுத்த வாரம் தமது தலைமையிலான இந்தியக் குழுவினர் அமெரிக்கா செல்லவிருப்பதாகவும், சட்டரீதியிலான அனைத்து வர்த்தக ஆவணங்களும் அப்போது கையெழுத்தாகும் என்று கூறினார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதற்கான அறிவிப்பு, இம்மாதம் வெளியிடப்பட்ட இருதரப்பு கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்பட்டிருந்தது.

>>>>>>><<<<<<

ஏரோ என்ஜின் தொழில்நுட்பத்தில் சுயசார்பு நிலையை எட்ட வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் வாயு சுழற்சி அமைப்பை பார்வையிட்டபின் விஞ்ஞானிகளுடன் உரையாடிய அவர், பூகோள அரசியல் விரிவடைந்துவரும் சூழ்நிலையில் ஏரோ என்ஜின் தொழில்நுட்பத்திற்கான புதிய முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் தன்னாட்சி வலிமையை உறுதி செய்வதற்கு இந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது, பாதுகாப்புத்துறையில் சுயசார்பு நிலை உறுதி செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்காணிப்பு மற்றும் ஆயுதங்களை திறம்பட கையாளுவதற்கு ஏரோ என்ஜின் தொழில்நுட்பம் அவசியமாகிறது என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

"இந்திய – ஐரோப்பிய யூனியன் குடியேற்ற வாய்ப்புகளும் - வடகிழக்கு மாநிலங்களும்" என்ற தலைப்பிலான நிகழ்ச்சிக்கு வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

*ஐரோப்பிய யூனியன் மற்றும் அஸ்ஸாம் மாநில அரசுடன் இணைந்து வெளியுறவு அமைச்சகம் மேற்கொண்டுள்ள இந்த நிகழ்ச்சி, இம்மாதம் 12-ஆம் தேதி குவஹாத்தியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.*

*ஐரோப்பிய யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையே வேலைவாய்ப்புக்கான இடம்பெயர்தல் மற்றும் இதற்கான கொள்கைகளை வகுப்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.*

*உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில், இடம்பெயர்தலுக்கான கொள்கை மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆகியவை இணைந்து இதற்கான செயல்திட்டம் குறித்து ஆய்வு செய்தன.*

*ஐரோப்பிய யூனியனை சேர்ந்த தொழிலாளர்களுக்கு வடகிழக்கு மாநிலங்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் வடகிழக்கு மாநில மக்களுக்கு ஐரோப்பிய யூனியனில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் இதில் பகிர்ந்துகொள்ளப்பட்டது.*

>>>>>>><<<<<<<

*அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நடத்த ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு Abbas Araghchi ஜெனிவா சென்றடைந்தார்.*

*ஈரானையொட்டி அமெரிக்கா தனது ராணுவ துருப்புகளை நிறுத்திவைத்துள்ள நிலையில், பதற்றம் நீடித்து வருவதாக அந்நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.*

*இந்நிலையில், ஈரான் அரசு வெளியிட்டுள்ள தகவலில், சமரச பேச்சுவார்த்தைகள் ஓமன் நாட்டின் மத்தியஸ்த நடவடிக்கையின் அடிப்படையில் மறைமுகமாக நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அமெரிக்கா வெளியிட்டுள்ள தகவலில், ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை திட்டம் உட்பட பல முக்கிய விஷயங்கள் இந்த பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஈரான் வெளியுறவு அமைச்சர், சுவிட்சர்லாந்து மற்றும் ஓமன் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து தங்களது நிலைப்பாட்டை தெரிவிப்பார்.*

அவர்கள் அமெரிக்கா சார்பில் கலந்துகொள்ளும் சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் திரு *Rafael Grossi*-யுடன் ஆலோசனை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

மின்னணு வர்த்தகம் மூலமாக பொம்மை விற்பனைக்கான தரக்கட்டுப்பாட்டு விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில், இந்திய தர நிர்ணய கட்டுப்பாடுகளை மீறியதாக *Snapdeal* என்ற தனியார் நிறுவனத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு வர்த்தகத்தில் வாடிக்கையாளர்களை ஏமாற்றும் வகையிலான விளம்பரங்களை செய்யும் நிறுவனங்கள் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஐ நா சர்வதேச குழந்தைகள் நல நிதியத்தின் இந்திய பிரதிநிதி திருமதி *Cynthia McCaffrey* வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட பின் ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின்மூலம் குழந்தைகளுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தர முடியும் என்று கூறினார்.

திறமையாகவும், பாதுகாப்பாகவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கையாளும் வகையில், நிபுணர்கள், தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் குழந்தைகள் நல அமைப்புகளின் பிரதிநிதிகளோடு விரிவாக ஆலோசிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

*பாதுகாப்பான வழிமுறைகளை கையாளுவதன் மூலம் தரமான செயற்கை நுண்ணறிவு சேவையை சமூகத்திற்கு அளிக்க முடியும் என்றும் திருமதி Cynthia McCaffrey கூறினார்.*

>>>>>>><<<<<<<

*இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான பயிற்சி இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*

*இதனை சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் தொடங்கி வைத்தார்.*

*பயணிகளுக்கான முன்னேற்பாட்டு ஆலோசனைகள் இதில் வழங்கப்பட்டன.*

*பயணத்தின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டது.*

*இவ்வாண்டு ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.*

*இந்தியாவிலிருந்து ஹஜ் செல்லும் யாத்ரிகர்களுக்கு சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகத்தில் தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்று சிறுபான்மையின நல அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>>><<<<<<<

*மருந்துப் பொருட்களின் உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுப்பதற்கான வாய்ப்பை*

*இந்திய – அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தித் தந்துள்ளதாக மருத்துவக் கருவிகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமத்தின் தலைவர் திரு ஆர் எஸ் தன்வர் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருந்துகள் மற்றும் மருத்துவக் கருவிகளின் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் கணிசமாக அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.*

*இந்திய மருத்துவக் கருவிகளுக்கான ஏற்றுமதி வரியை இந்தியா குறைத்திருப்பதன் மூலம், அமெரிக்க சந்தையில் போட்டியை எதிர்கொள்ளும் ஆற்றலை இந்தியா பெறும் என்றும் திரு தன்வர் கூறினார்.*

>>>>>>><<<<<<<

*மத்திய அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள iGOT கர்மயோகி இயக்கத்தின் செயல் விளக்க அரங்கம் புதுதில்லியில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் இடம்பெற்றுள்ளது.*

*ஆன்லைன் பணியிடை பயிற்சியை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேம்படுத்தும் செயல் முறைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.*

*மத்திய பணியாளர் நல அமைச்சகம் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அன்றாட அரசு நிர்வாக செயல்பாடுகளை அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகளில் பணியாளர்கள் தெரிந்துகொண்டு திறம்பட செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் தரம் உயர்த்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manish Sureskumar பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 7-5 என்ற செட்கணக்கில் கொரியாவின் Uisung Park-ஐ வென்றார்.*

*பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் வைதேகி சௌத்ரியும் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில், அவர் 6-2,*

*7-5 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Evgeniya Burduna-வை வென்றார்.*

*>>>>>>><<<<<<<*

*குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பனிச்சறுக்கு பிரிவில் இந்தியாவின் Arif Khan இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*இத்தாலியின் Milano Cortina-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்றில் 44வது இடத்தைப் பிடித்து அவர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.*

*>>>>>>>END<<<<<<<*